අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/03/56/03/03 (II) ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2023.07. 19

සියලු ම පළාත් අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්,
සියලු ම කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්,
සියලු ම විදුහල්පතිවරුන් වෙත,

**'පර්යේෂණ සතිය - 2023' - අගෝස්තු 7 සිට 11දක්වා**
**'දැනුමින් පිරි අනාගතයකට - සිසු පර්යේෂකයෝ' වැඩසටහන**

සාක්ෂ්‍ය පදනම් කර ගත් තීරණ ගැනීමේ සංස්කෘතියක් පාසල් පද්ධතිය තුළ නිර්මාණය කිරීම තුළින් දැනුමින් පිරි අනාගතයකට දැයේ පාසල් දරුවන් යොමු කිරීමේ අරමුණින් අධ්‍යාපන අමාත්‍යාංශයේ පර්යේෂණ හා සංවර්ධන ශාඛාව මගින් වාර්ෂික ව ක්‍රියාත්මක කරනු ලබන 'පාසල් පර්යේෂණ සතිය' වැඩසටහනේ 2023 වසරට අදාළ ක්‍රියාකාරකම් 2023 අගෝස්තු 7 සිට 11 දක්වා වූ සතිය තුළ ක්‍රියාත්මක කිරීමට සැලසුම් කර ඇත. ඒ අනුව එම සතිය පාසල් පර්යේෂණ සතිය ලෙස නම් කිරීමටත්, එම සතිය තුළ සිසු දරු-දැරියන් පර්යේෂණ ආශ්‍රිත විවිධ ක්‍රියාකාරකම්වලට යොමු කිරීමටත් අපේක්ෂා කෙරේ.

02. කාණ්ඩ 03ක් යටතේ ක්‍රියාත්මක කිරීමට නියමිත මෙම වැඩසටහන පහත පරිදි පෙළ ගස්වා ඇත. එක් එක් කාණ්ඩය සඳහා ක්‍රියාත්මක කළ යුතු ක්‍රියාකාරකම් පිළිබඳ වැඩිදුර තොරතුරු හා මාර්ගෝපදේශ **ඇමුණුම්** යටතේ දක්වා ඇත.

| | | | |
|---|---|---|---|
| I. ප්‍රාථමික අංශය | (1 සිට 5 ශ්‍රේණිය දක්වා) | - **'සිසු නිරීක්ෂණ දින පොත'** | - ඇමුණුම 1 |
| II. කනිෂ්ඨ ද්විතීයික අංශය | (6 සිට 9 ශ්‍රේණිය දක්වා) | - **'සිසු ප්‍රත්‍යවේක්ෂණ ජර්නලය'** | - ඇමුණුම 2 |
| III. ජ්‍යෙෂ්ඨ ද්විතීයික අංශය | (10 සිට 13 ශ්‍රේණිය දක්වා) | - **'පර්යේෂණ ව්‍යාපෘතිය'** | - ඇමුණුම 3 |

03. මෙම වැඩසටහන ක්‍රියාවට නැංවීමේ වගකීම පාසල් විදුහල්පතිවරුන් වෙත පැවරෙන අතර, නියෝජ්‍ය විදුහල්පති (අධ්‍යාපන සංවර්ධන)ගේ අධීක්ෂණය යටතේ වැඩසටහන ක්‍රියාවට නැංවීමේ වගකීම අංශ භාර ප්‍රධානීන් වෙත පැවරීම යෝග්‍ය වේ.

04. ඒ අනුව, හේතු පාදක තීරණ ගැනීමේ සංස්කෘතියක් වෙත පාසල් සිසු-සිසුවියන් රැගෙන යාමේ මූලාරම්භයක් ලෙස මෙම **'දැනුමින් පිරි අනාගතයකට - සිසු පර්යේෂකයෝ'** වැඩසටහන සාර්ථක කර ගැනීමට අවශ්‍ය කටයුතු සම්පාදනය කරන ලෙස කාරුණික ව දන්වා සිටිමි.

05. මේ සම්බන්ධයෙන් ඔබ දක්වන සහයෝගය ඉතා අගය කොට සලකමි.

BHP
බී. මහේෂි වීරසූරිය
අතිරේක ලේකම්
(ප්‍රතිපත්ති, සැලසුම් හා කාර්ය සාධන සමාලෝචන)
අධ්‍යාපන ලේකම් වෙනුවට

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. } ED/03/56/03/03 (II) — ඔබේ අංකය / உமது இல. / Your Ref. } — දිනය / திகதி / Date } 2023.07.

**Translation**

சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்,

**‘ஆராயச்சி வாரம் - 2023’ – ஆகஸ்ட் 7 முதல்11 வரை**
**‘அறிவார்ந்த எதிர்காலத்தை நோக்கி – மாணவர் ஆராய்ச்சியாளர் செயற்றிட்டம்**

ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை எடுக்கம் கலாசாரம் ஒன்றை பாடசாலை முறைமைக்குள் உருவாக்குவதன் மூலமாக அறிவார்ந்த எதிர்காலமொன்றுக்கு நாட்டின் பாடசாலை சிறார்களை முன்னிலைப்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கிளையின் ஊடாக வருடாந்தம் நடைமுறைப்படுத்தப்படும் “பாடசாலை ஆராய்ச்சி வாரம்” செயற்றிட்டத்தின் 2023 ஆம் ஆண்டுக்குரிய செயற்பாடுகளை 2023 ஆகஸ்ட் 7 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையிலான வாரத்திற்குள் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த வாரம் பாடசாலை ஆராய்ச்சி வாரமாக பெயரிடுவதற்கும், அந்த வாரத்திற்குள் மாணவர்களை ஆராயச்சி சார்ந்த பல்வேறு செயற்பாடுகளுக்கு முன்னிலைப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

02. குழுக்களின் கீழ் அமுல்படுத்துவதற்குரிய இந்த செயற்றிட்டத்தை பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுக்கள் தொடர்பாகவும் அமுல்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான மேலதிக தகவல்கள் மற்றும் வழிகாட்டல்கள் இணைப்புகள் மூலமாக காட்டப்பட்டுள்ளன

| | | | | |
|---|---|---|---|---|
| I. ஆராம்ப பிரிவு | | (1 முதல் 5 ஆம் தரம் வரை) | -‘**மாணவர் அவதானிப்பு நாட்குறிப்பேடு** | - இணைப்பு 1 |
| II. கனிஷ்ட பிரிவு | இடைநிலை | (6 முதல் 9 ஆம் தரம் வரை) | - ‘**மாணவர் கருத்து ஜர்னல்**’ | - இணைப்பு 2 |
| III. சிரேஷ்ட பிரிவு | இடைநிலை | (10 முதல் 13 ஆம் தரம் வரை) | - ‘**ஆராய்ச்சி கருத்திட்டம்** | - இணைப்பு 3 |

03. இந்த செயற்றிட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்கப்படுவதுடன், பிரதி அதிபரின் (கல்வி அபிவிருத்தி) மேற்பார்வையின் கீழ் செயல்படுத்தும் பொறுப்பு பிரிவுத் தலைவர்களிடம் ஒப்படைப்பது உகந்ததாகும்.

04. அதன் பிரகாரம், காரணம் சார்ந்த முடிவுகளை எடுக்கம் கலாசாரத்தை நோக்கி பாடசாலை மாணவர்களை இட்டுச்செல்லும் ஆரம்ப பணியாக இந்த “அறிவார்ந்த எதிர்காலத்திற்கு – மாணவர் ஆராயச்சியாளர்கள்” செயற்றிட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

05. இது குறித்து நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பினை பெரிதும் மதிக்கின்றேன்..

பீ. மகேஷி வீரசூரிய
மேலதிக செயலாளர்
கொள்கை, திட்டமிடல் மற்றும் செயல்திறன் மீளாய்வு)
கல்விச் செயலாளருக்காக

**Translation**

**இணைப்பு 01**

**பாடசாலை ஆராய்ச்சி வாரம் தொடர்பான ஆலோசனைப் படிவம்**
**ஆரம்பப் பிரிவு**

பாடசாலை முறைமைக்குள் ஆதாரங்களை அடிப.படையாகக் கொண்ட கலாசாரம் ஒன்றை வடிவமைப்பதன் மூலமாக அறிவுடன் கூடிய எதிர்காலத்தையொட்டி நாட்டின் மாணவர்களை முன்னிலைப்படுத்தும் நோக்குடன் 2023 ஆகஸ்ட் 7 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையிலான காலத்தை 'பாடசாலை ஆராய்ச்சி வாரம்' என பெயரிடப்பட்டுள்ளதுடன், அந்த காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் மற்றும் ஆலோசனைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**ஆசிரியர்களே**

1. ஆரம்பப் பிரிவுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வாரத்தில் ஒருநாள் மற்றும் வசதியான நேரத்தை தெரிவு செய்துக் கொள்ளலாம்
2. இந்த பயிற்சிக்காக ஒரு சிறிய புத்தகம்/நாட்குறிப்பொன்று/பழைய நாட்குறிப்பொன்று/சேர்க்கப்பட்ட சில பக்கங்கள் மாணவர்களால் கொண்டுவரப்படல் வேண்டும்.
3. தன்னைச் சுற்றியுள்ள சூழலுடன் தொடர்புடைய எதையும் அவதானித்து நாட்குறிப்பில் குறிப்பெடுக்கும் விதம் தொடர்பில் பிள்ளைகள் அறிவூட்டப்பட வேண்டும்..
   இதற்காக சுற்றுப்புற சூழலில் காணக்கூடிய பின்வரும் உதாரணங்கள் அல்லது வேறு பொருத்தமான எந்தவொரு காட்சி/சம்பவம் ஒன்றையோ பயன்படுத்தலாம்.
   **உதாரணம்:**
   :
   - ஒரு தவளையின் வாழ்க்கைச் சுழற்சி
   - சிறிய குஞ்சுகளுடன் கூடிய ஒரு பறவையின் கூடு
   - விதையிலிருந்து ஒரு நாற்று வளரும் விதம
   - பறவைகளின் கூட்டிற்கு பறவைகளின் வருவதை அவதானித்தல
   - இரவு வானம் / அந்தி வானம்
   -
4. தாம் தெரிவு செய்த நிகழ்வை நாட்குறிப்பில் குறிப்பெடுக்கும் விதம் தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்தவும். இதன்போது பிள்ளைகள் பார்த்ததையும் அவை தொடர்பாக அவர்கள் எவ்வாறு உணர்ந்தார்கள் என்பதையும் குறிப்பெடுவதற்கு ஊக்குவிக்கவும
   **உதாரணம்:**
   "*இன்று குருவிகளின் தட்டில் போட்ட சோரை சாப்பிட மீன்கொத்தி ஒன்று வந்தது. அது தனியாகவே வந்தது. ஆனால் பொதுவாக கூட்டத்துடன் வரும் ஒருவித பறவைகளும் வந்தன. அதாவது சில பறவைகள் தனியாகவே இருக்கும். சில பறவைகள் கூட்டமாக இருக்கும்*"
5. இவ்வாறு அவதானிப்பதற்கு தாம் தெரிவு செய்த சம்பவம் தொடர்பாக 3 முதல் 6 கிழமை வரை நாள்தோறும் நாட்குறிப்பில் குறிப்புகளை எழுதுவதற்கு குழந்தைகளை ஊக்குவிக்கவும்.
6. குறிப்பெடுக்கப்பட்ட நாட்குறிப்பு மதிப்பிடுதலை செப்டம்பர் 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவும்.
7. நாட்குறிப்புகளை மதிப்பீடும் போது பின்வரும் தேர்வளவுகள் படி புள்ளிகளை வழங்கி வகுப்பு மட்டத்தில் மற்றும் தர மட்டத்தில் மிகவும் புதிய மற்றும் படைப்பாற்றலைக் கொண்ட நாட்குறிப்பு கட்டுரைகளை தெரிவு செய்து பாடசாலை மட்டத்தில் பாராட்டுச் சான்றிதழ்களை நடவடிக்கை எடுக்கவும்..
8. உரிய மதிப்பீட்டிற்காக பிரிவுத் தலைவர் / வகுப்புத் தலைவரின் தலைமையில் குழுவொன்றை அமைக்கவும்

**மதிப்பீட்டு நியதிகள்** ((இந்த நியதிகளைஉங்களின் தேவைக்கேற்ப மாற்றலாம)

- அவதானிப்பிற்காக தெரிவு செய்யப்பட்ட துறையின்புதிய கண்டுபிடிப்பு
- அவதானிப்புகளை பதிவு செய்வதோடு மேலதிகமாக அவற்றைப் பற்றிய தமது தமது உணர்வுகளையும பகிர்ந்து கொள்ளுதல்

- நாட்குறிப்பை படைப்பாற்றலுடன் முன்வைத்தல் ((இதன்போது பழைய நாட்குறிப்பேடு/ஒன்றாக சேர்க்கப்பட் பல பக்கங்கள் அல்லது வள பாதுகாப்பை உறுதிப்படுத்தி வேறு படைப்பாற்றலுடன் முன்வைக்கப்பட்டுள்ளவற்றை மதிப்பீடு செய்தல்
- ஒட்டுமொத்த முன்வைத்தல்களை( இதன்போது,மொழி, கையெழுத்து, முறை தொடர்பில் கருதிற்கொள்ளவும்.


**பாடசாலை ஆராய்ச்சி வாரம் தொடர்பான ஆலோசனை படிவம்**
**கனிஷ்டஇரண்டாம் நிலை பிரிவு**

2023 ஆகஸ்ட் 7 முதல்11 வரை நடைமுறைப்படுத்தப்படும் 'பாடசாலை ஆராய்ச்சி வாரத்திற்குள்" கனிஷ்ட இடைநலை பிரிவு மூலமாக மேற்கொள்ள வேண்டியெ சயற்பாடுகள் மற்றும் ஆலோசனைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**ஆசிரியர்களே,**

1. கனிஷ்ட இடைநிலை பிரிவுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வாரத்தில் ஒருநாள் மற்றும் வசதியான நேரத்தை தெரிவு செய்துக் கொள்ளலாம
2. இந்த பயிற்சிக்காக ஒரு சிறிய புத்தகம்/நாட்குறிப்பொன்று/பழைய நாட்குறிப்பொன்று/சேர்க்கப்பட்ட சில பக்கங்கள் மாணவர்களால் கொண்டுவரப்படல் வேண்டும்.
3. தரம் 06 முதல் 09 வரையிலான மாணவர்களை ஒரு இடத்திற்கு அழைத்து பிரதிபலிப்பு என்றால் என்னவென்பதை அடையாளப்படுத்தவும்

பட்டெறிகைக்கு மூல காரணங்களாக அமைவது எண்ணங்களே. முதலில் நம் மனதில் எண்ணங்கள் தோன்றும். இரண்டாவதாக, எங்களால் அந்த எண்ணத்தை செயலாக மாற்றப்படுகின்றது. நாம் செயலை மேற்கொள்வதற்கு முன், அத்துடன் செயலை மேற்கொள்ளும்போது மற்றும் செயலை மேற்கொண்ட பின்னர் அது குறித்து எண்ணப்படுகின்றது. இவ்வாறு எமது செயல் தொடர்பாக விசாரணை முறையில் எண்ணும்போது நான் அவ்வாறு செய்வதற்கு காரணமாக அமைந்தது என்ன? நான் அந்த செயலை மேற்கொண்டதில் எதிர்பாரத்தது என்ன? உண்மையிலேயே நடந்தது என்ன? போன்ற காரண காரணிகள் தோன்றும். இந்த செயற்பாடு தொடர்ந்து இடம்பெறும்போது ஏதேனும் ஒன்றை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பான புரிந்துணர்வு எம்முள் தோன்றும் எமது பட்டெறிகை சிந்தனை மூலமாகவே அது இடம் பெறுகின்றது.




**செயலை மேற்கொள்வதற்கு முன் (Reflection-for-action)**
**செயலை மேற்கொள்ளும்போது (Reflection-in-action)**
**செயலை மேற்கொண்ட பின்னர (Reflection-on-action)**

மேற்கொண்டு வாசித்தல்:

- கொடிதுவக்கு,கொ. (2017). *நான் செயல் அடிப்படையில் ஆராய்ச்சியாளராவேன்.* வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
- https://www.niu.edu/citl/resources/guides/instructional-guide/reflective-journals-and-learninglogs.shtml#:~:text=Reflective%20journals%20are%20personal%20records,often%20just%20after%20they%20occur

4. இதற்காக பொருத்தமான வளவாளர் ஒருவரை, அதாவது பணி ஆராய்ச்சியாளர் ஒருவரை இணைத்துக்கொள்ளுதல் மிகவும் உகந்ததாகும்
5. மாணவர்களுக்கு பட்டெறிகை என்றால் என்னவென்பதை அடையாளம காட்டக் கூடிய படிவ இலக்கம் 01 மற்றும் ஆய்வு செய்வதற்காக பூர்த்தி செய்யப்பட்ட இரண்டு மாதிரி படிவங்கள ((இலக்கம் 02 மற்றும் 03) இத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளது

6. முதலில், மாதிரி படிவத்தை பயன்படுத்தி ஆசிரியர்/வளவாளரினால் மாணவர்களுடன் இந்தசெய்ற்பாடு மேற்கொளளப்படல் வேண்டும்.
7. இரண்டாவதாக, செயற்பாட்டின் ஊடாக மாணவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவத்தை பூர்த்தி செய்யப்பட்ட படிவத்துடன் ஒப்பிட்டு கலந்துரையாடவும். அதன்போது மாணவர்களால் எழுதப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முன் மேற்கொள்ளும்போது மற்றும் மேற்கொண்ட பின்னர் பட்டெறிகையை அடையாளம் காணவும்.
8. இறுதியாக மாணவர்களைக் கொண்டு பணித்தாள்களை பூர்த்தி செய்யும் விதம் தொடர்பாக ஆலோசனை வழங்கவும். இதன்போது முக்கியமாக நீர் மற்றும் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை அல்லது தாங்கள் வாழும் சூழலில் அவர்கள் அனுபவிக்கும் அல்லது அவதானிக்கும் பிரச்சினைகளை தெரிவு செய்வதற்கு மாணவர்களை ஊக்குவிக்கவும்.
9. அதன்போது சிக்கலை தீர்ப்பதற்கு பொருத்தமானதென கருதும் செயற்பாடுகள், செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அதன் வெற்றி /தோல்வி, வெற்றியை அடையும் வரை மீண்டும் மீண்டும் எடுக்கப்பட்ட செயல்கள் பற்றிய சிந்தனைகள் உட்பட பட்டெறிகை இதழில் குறிப்புகளை எழுத மாணவர்களை ஊக்குவிக்கவும்
10. இவ்வாறு குறிப்பெழுதுதலை 3-6 கிழமைகள் நாளாந்தம் மேற்கொள்வதற்கு மாணவர்களை ஊக்குவிக்கவும
11. குறிப்பெடுக்கும் பட்டெறிகை இதழை மதிப்பீடு செய்தல் செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் தொடங்கவும்
12. பட்டெறிகை இதழை மதிப்பீடு செய்யும்போது பின்வரும் நியதிகளின் படி புள்ளிகளை வழங்கி வகுப்பு மட்டத்தில் மற்றும் தர மட்டத்தில் மகவும் தர்க்கரீதியாக எழுதப்பட்ட இதழை தெரிவு செய்து பாடசாலை மட்டத்தில் சிறப்பு விருதுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.
13. குறிப்பிட்ட மதிப்பீட்டிற்காக பிரிவுத் தலைவர் தரங்களின் தலைவர் தலைமையில் குழுவொன்றை அமைத்துக் கொள்ளவும்

    குறிப்பிட்ட மதிப்பீடு தொடர்பாக பிரிவுத் தலைவர் / தர தலைவரின் தலைமையில் குழுவொன்றை நியமிக்கவும்.

**மதிப்பீட்டு நியதிகள்** (இந்த நியதிகளை உங்களுக்கு உகந்த விதத்தில் மாற்றி அமைக்கலாம்

- தெரிவு செய்யப்பட்ட சிக்கலின் தனித்தன்மை
- சிக்கல்களுக்கு தீர்வு காணும்போது மகவும் தர்க்கரீதியாகவும் பகுப்பாயவு ரீதியாகவும் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் காணப்படுவதை அவதானித்தல்
- மாற்று தீர்வுகளை கையாளும் செயற்பாடுகளின் போது பிரதிபலிப்புக் குறிப்புக்கள் (செயற்படுத்துவதற்கு முன், இடையில், மற்றும் பின்னர்) உள்ளடக்கப்பட்டிருத்தல)
- பிரதிபலிப்பு ஜேர்னலை ஆக்கபூர்வமான முறையில் முன்வைத்தல் (இதன்போது, நாட்குறிப்பேடு/பழைய நாட்குறிப்பேடு/சேகரிக்கப்பட்ட சில் பக்கங்கள் அல்லது வளபாதுகாப்பை உறுதிப்படுத்தும் வேறு ஆக்கபூர்வமான விதத்தில் மேறகொள்ளப்பட்ட முன்வைத்தல்களைப் பாராட்டுதல்)
- ஒட்டுமொத்த முன்வைப்பு (இதன்போது மொழி,கையெழுத்துஇ ஒழுங்குமுறை போன்றவற்றை கருத்திற்கொள்ளவும்)

**மாணவர் செயற்பாட்டு படிவம் :01**

| |
|---|
| 01 உங்களுடைய பாடசாலை வாழ்க்கையில் அல்லது வாழ்க்கையில் நீங்கள் சந்தித்த உங்களால் தீர்வு காணப்பட்ட பிரச்சினை ஒன்றை எழுதவும் |
| 02 அந்த பிரச்சினைக்கு நீங்கள் பெற்றுக்கொண்ட தீர்வு மற்றும் அவ்வாறான தீர்வொன்றை எடுப்பதற்கான காரணத்தை எழுதவும |
| 03 அந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு பின்பற்றிய செயற்பாட்டை படிப்படியாக விவரிக்கவும் |
| 04 உங்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு நீங்கள் மேற்கொண்ட செயற்பாட்டின் மூலமாக நீங்கள் எதிர்பார்த்த தீர்வு கிடைத்ததா? |

**குறிப்பு:**

உங்கள் பட்டெறிகை இதழை தொடங்குவதற்காக நீங்கள் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கும் பிரச்சினையையே பயன்படுத்திக்கொள்ளவும்

பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பலவேறு முயச்றிகளை மேற்கொள்ளலாம் என நீங்கள் நினைக்கலாம் அவற்றை தர்க்கரீதியாக ஆராய்ந்து மிகவும் பொருத்தமான தீர்வை தெரிவு செய்து செயற்படுத்தவும். அதுகுறித்தான அனைத்து சம்பவங்களையும் பட்டெறிகை இதழில் குறித்துக் கொள்ளவும். தீர்வை செயற்படுத்தும் விதம், அதன் வெற்றி அல்லது தோல்வி, அது குறித்து நீங்கள் சந்திக்கும் விதம் போன்ற அனைத்தும் பட்டெறிகை இதழில் குறிக்துக்கொள்ளவும். ஆரம்பத்தில், தேவையானற்றை எழுதுவதில் சிரமங்கள் ஏற்படலாம். ஆதை கவனத்திற்கொள்ளாது, உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்கள் அனைத்தையும் பட்டெறிகை இதழில் குறித்துக் கொள்ளவும். ஊங்களுக்கு ஏற்படும் தடைகள், பிழைகள், புதிய பரிசோதனைகள், ஏனையோர்களின் கருத்துக்கள், இவையனைத்தையும் தெரிவின்றி

குறித்துக்கொள்ளவும். சிலவேலை, பிரச்சினையுடன் தொடர்பு இல்லாதவற்றைக் கூட நீங்கள் எழுதியிருக்கலாம். கவலைப்பட வேண்டாம். புடிப்படியாக நீங்கள் சரியான வழியை அடைவீர்கள்

**மாணவர் செயற்பாட்டு படிவம் :02**

**01 உங்களால் தீர்வு காணப்பட்ட உங்களுடைய பாடசாலை வாழ்க்கையில் அல்லது பொது வாழ்ச்கையில் நீங்கள் சந்தித்த பிரச்சினை ஒன்றை எழுதவும்..**

**வரலாறு பாடத்தை படிக்கும் போது நித்திரை கொள்தல்**

*வரலாறு பாடத்தில் ஏனைய பாடங்களை விட விடயங்கள் அதிகமாக காணப்படும் வருடம்,பெயர்,இடம் போன்ற முக்கிய காரணிகளை நினைவில் கைத்துக்கொள்ள வேண்டும். பாடப்புதடதகங்களில் அதிகமான விடயங்கள் சிறிய எழுத்தில் காட்டப்பட்டுள்ளன.*

**02 அந்த பிரச்சனைக்கு நீங்கள் பெற்றுக்கொண்ட தீர்வு மற்றும் அவ்வாறான தீர்வை எடுப்பதற்கான காரணத்தை எழுதவும்.**

| | |
|---|---|
| ஆசிரியர்களிடம் கேட்றிந்தல் | தீர்வுகள் தொடர்பான அனுபவங்கள் உள்ளதால் |
| வரலாறு பாடத்திற்கு அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களிடம் கேட்டறிந்தல் | அவர்களுக்கு அந்த பிரச்சனை இல்லாத படியால் |
| மற்ற பெரியவர்கள் /அறிவுள்ளவர்களிடம் கேட்டறிந்தல் | வெவ்வேறு வெற்றிகரமான கருத்துக்கள் எழக்கூடியதால் |

**03 அந்த பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு நீங்கள் பின்பற்றிய செயற்பாடுகளை படிப்படியாக விவரிக்கவும்**

- ஆசிரியர்களிடம் கேட்டேன்
- வரலாறு பாடத்தில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களிடம் கேட்டேன்
- வேறு பெரியவர்கள்/ அறிவுடையவர்களிடம் கேட்டேன்.
- மேலும் வெற்றியடையலாம் என்று நனைத்த சிறு குறிப்புகளை எழுத ஆரம்பித்னே்
- எனினும், வாசிப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதால் நித்திரையை உணர்ந்தேன்
- பாடத்தின் குறிப்பை(mind map) பின் மூலமாக வரைந்தேன். (டிமய் காகிதத்தைக்கொண்டு அடிக்கடி கண்ணில் தெரியும்படி சுவரில் காட்சிப்படுத்தினேன்.)
- அடிக்கடி காண்பதால் நினைவில் வைத்துக்கொள்வதற்கு இலகுவாக பட்டது.

**04 உங்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு உங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மூலமாக நீங்கள் எதிர்பார்த்த திர்வு கிடைத்தனவா? அவ்வாறு இல்லையெனில், மேலும் உங்களால் வேறு என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியும்?**

ஆம். அவ்வாறு இல்லையென்றால், என்னுடைய நண்பர் ஒருவர் பின்தொடர்ந்து வரும் ஒரு பெரியவரிடம் கேள்விகளை கேட்பதற்கு அல்லது என் சகோதரிக்கு சொல்லி வரலாற்றுப் பாடம் கற்பிக்கும் வாய்ப்பை பயன்படுத்துவேன.

மாணவர் செயற்பாட்டு படிவம் :03

**01 உங்களால் தீர்வு காணப்பட்ட உங்கள் பாடசாலை வாழ்க்கையில் அல்லது உங்கள் சாதார வாழ்க்கையில் நீங்கள் சந்தித்த ஒரு பிரச்சினையை எடுதுங்கள்.**

**ஒரு கூட்டத்தில் முன் வைக்கும்போது அல்லது பேசும்போது பீதி ஏற்படுவது**

*அனைவரும் என்னை பார்க்கிறார்கள் என்று உணரும்போது*

*நான் சொல்வது சரிதானா என்ற சந்தேகம் ற்படுவதால்*

**02 அந்த பிரச்சினைக்கு நீங்கள் பெற்றுக்கொண்ட தீர்வு மற்றும் அவ்வாறான தீர்வை எடுப்பதற்கான காரணத்தை எழுதவும்.**

| | |
|---|---|
| மூத்த சகோதரனிடம் கேடடறிந்தல் | தீர்வுகள் தொடர்பான அனுபவம் உள்ளபடியால் |
| ஆசரியரிடம் கேட்டறிந்தல் | அவர்களிடம் மிகவும் சிறந்த தீர்வுகள் இருக்கலாம் என்று எண்ணியதால |

**03 அந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு பின்பற்றிய செயற்பாடுகளை படிப்படியாக விவரிக்கவும்**

- சகோதரனின் ஆலோசனைப் படி கதையொன்றை எழுதிக்கொண்டேன்.
- நான் கதையை சத்தமாக வாசித்து பழகினேன்
- கண்ணாடி முன் நின்று சத்தமாக பேசினேன்
- தாயாரின் முன் உரை நிகழ்த்தினேன்.

**04 உங்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு உங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மூலமாக நீங்கள் எதிர்பார்த்த திர்வு கிடைத்தனவா? அவ்வாறு இல்லையெனில், மேலும் உங்களால் வேறு என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியும்?**

இல்லை.

எனவே, பழகிய கதையை குடும்பத்தில் அனைவரின் முன்னிலையில், சத்தமாக கூறுதல், அப்படி இல்லாவிட்டால் எனது நண்பர் ஒருவரினால் பின்பற்றப்படும் ஒரு பெரியவரைக் கொண்டு கேள்விகள் கேட்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ளல் அல்லது என்னுடைய சகோதரிக்கு ஒரு கதையை சொல்வதைப் போல் சத்தமாக வரலாற்றுப் பாடத்தை சொல்லிக் கொடுப்பேன். அதன் மூலம், பலபேர் முன்னிலையில் விளக்கமளித்தல் அல்லது கதையொன்றை சொல்வதற்கு வழமையான பயிற்சியுடன் எவ்வித சலனமும் இன்றி அப்பணியை நிறைவேற்றுவதற்கு என்னால் முடியும்.

**பாடசாலை வாரத்திற்கான ஆலோசனைப் படிவம்**
**சிரேஷ்ட இரண்டாம் நிலைப் பிரிவு**

2023 ஆகஸ்ட் 7 முதல் 11 வரை நடைமுறைப்படுத்தப்படும் ‘‘பாடசாலை ஆராயச்சி வாரத்திற்குள்’’ சிரேஷ்ட இடைநிலை பிரிவின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டியெ சயல்பாடுகள் மற்றும் ஆலோசனைகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

இந்த செயற்றிட்டம் “Young Researcher Programme” (மாணவர் ஆராய்ச்சியாளர்கள் எனும் தலைப்பில் செயல்படுவதுடன், இது பாடசாலை மட்டம் வலய மட்டம் மாகாண மட்டம் வரை செயல்படுத்தப்படும் செயற்றிட்டமாகும்.

‘‘மாணவர் ஆராய்ச்சியாளர்கள செயற்றிட்டம்

பாடசாலை மட்டம
உகந்த பரிந்துரைகள 3

- பாடசாலை மட்டத்தில் மதிப்பீடு3 முன்மொழிவுகளை தெரிவுசெய்து வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்னிலைப்படுத்தல்

↓

வலய மட்டம் உகந்த
பரிந்துரைகள 3

- வலய மட்டத்திலான மதிப்பீடு மற்றும் உகந்த 3 முன்மொழிவுகளை தெரிவுசெய்து கல்வி அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தல்

↓

மாணவர் மட்டம உகந்த
பரிந்துரைகள 3

- மாகாண மட்டத்திலான மதிப்பீடு மற்றும் உகந்த 3 முன்மொழிவுகளை தெரிவுசெய்து கல்வி அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தல

↓

தேசிய மட்டம்
கல்வி அமைச்சு(
27 முன்மொழிவுகள்7

- தேசிய மட்டத்தை அடைந்த 27 குழுக்களின் ஆராயச்சிகைளை செயல்படுத்துவதற் முன்னிலைப்படுத்தல

↓

ஆராயச்சிகளை
நடைமுறைப்படுத்தல்

↓

ஆய்வு அறிக்கைகளை
வமங்குதல்

↓

மதிப்பீடு

↓

வாய்மொழி விளக்கம்

↓

முதிப்பீடு

↓

தேசிய மடட்டத்திலான
வெற்றியாளர்களை
தெரிவு செய்தல்

**அதிபர்களே**

1. சிரேஷ்ட இரண்டாம் நிலை பிரிவிற்குரிய நிகழ்வுகளை அடையாளப்படுத்துவதற்காக உரிய வாரத்தில் ஒருநாள் வசதியான சேரத்தை தெரிவு செய்துக் கொள்ளலாம்.

2. 10 முதல் 13 வரையிலான தரங்களின் மாணவர்களை ஒரு இடத்தில் ஒன்று கூட்டி, ஆராய்ச்சி ஒன்று மற்றும் ஆராய்ச்சி முன்மொழிவு என்றால் என்னவென்பதை அறிமுகப்படுத்தல்

3. இதற்காக உங்கள் பாடசாலைக்குரிய வலயக் கல்வி பணிமனையில் மற்றும் கல்வித் திணைக்களத்தில் ஆராய்ச்சி விடாத்திற்குப் பொறுப்பான பணிப்பாளரின் ஒத்துழைப்பு மற்றும் பொருத்தமான வளவாளர் ஒருவரின் உதவியைப் பெறுவது உகந்ததாகும

4. இதற்கு மேலதிகமாக கல்வி அமைச்சு மற்றும் தேசிய நீர்வழங்கள் மற்றும் நீர் வடிகால் சபை மூலமாக அறிவூட்டும் நிகழ்வொன்றை இணையவழி ஊடாக மேற்கொள்ள இருப்பதுடன், வலய மற்றும் மாகாண ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு அலுவலர்கள் ஊடாக அது குறித்து அறிவுறுத்தப்படும

5. ஆராய்ச்சி முன்மொழிவுகளை குழுவாக முன்னிலைப்படுத்த வேண்டும். ஆராய்ச்சிக் குழுவிற்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவர் இருக்க வேண்டியதுடன், அந்த ஆசிரியர் உட்பட குழுவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 05 க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

6. " நிலைபேறுடன் கூடிய அபிவிருத்திக்காக வலுசக்தி" என்ற தலைப்பை அடிப்படையாக வைத்து ஆராய்ச்சி முன்மொழிவை சமர்ப்பிக்கவேண்டியதுடன், பாடசாலை மட்டத்திலான முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2023 செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதியாகும்.

7. ஆராயச்சி முன்மொழிவுகள் சிங்களம் /தமிழ் /ஆங்கிலம் போன்ற மொழிகளில் எந்தவொரு மொழியிலும் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் **ஆங்கில மொழியில் சமரப்பிப்பது மிகவும் பொருத்தமாகும்**

8. மாணவர்களால் முன்வைக்கப்படும் ஆராய்ச்சி முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்காக பிரதி/உதவி அதிபர் ஒருவரின் தலைமையில் பிரிவுத் தலைவர்கள் /தரங்களின் தலைவர்கள் உள்ளடங்கிய குழுவொன்றை அமைத்துக்கொள்ளவும்.

9. மாணவர்கள் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி முன்மொழிவு மாதிரிப் படிவம் மற்றும் மதிப்பீட்டு நியதிகளை பயன்படுத்தி பாடசாலை மூலமாக 03 முன்மொழிவுகளை தெரிவு செய்ய வேண்டியதுடன் அவ்வாறு தெரிவு செய்யப்படும் 03 ஆராய்ச்சி முன்மொழிவுகளையும் 2023 செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக வலயக் கல்வி பணிமனையின் ஆராய்ச்சி விடயத்திற்குப் பொறுப்பான பி.க.ப./உ.க.ப வலய ஒருங்கிணைப்பு அலுவலருக்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

**ஆராய்ச்சி விடயத்திற்குப் பொறுப்பான மாகாண மற்றும் வலய (பி.க.ப/உ.க.ப). ஒருங்கிணைப்பு அலுவலர்களே,**

10. ஒரு பாடசாலையில் 03 என முன்வைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கு பொருத்தமான குழுவொன்றை நியமித்து அந்த முன்மொழிவுகளை உரிய நியதிகளை பயன்படுத்தி, மதிப்பீடு செய்து அந்த ஆராய்ச்சி முன்மொழிவுகளில் ஒரு கல்வி வலயத்தின் சிறப்பு மட்டத்திலான 03 முன்மொழிவுகளை தெரிவுசெய்து 2023 அக்டோபர் 23 ஆம் திகதி அல்லது அதற்கு பாடசாலை மூலமாக முன்னிலைப்படுத்தப்படும் ஆராய்ச்சி முன்மொழிவுகளில் ஒரு கல்வி வலயத்தின் சிறப்பு மட்டத்திலான 03 முன்மொழிவுகளை தெரிவு செய்து 2022 ஜுன் 20 ஆம் திகதிக்கு முன்னதாக அல்லது ஆராய்ச்சி விடயத்திற்குப் பொறுப்பான பி.க.ப/உ.க.பணிப்பாளருக்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

11. வலய மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள் ஆராய்ச்சி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கு பொருத்தமான குழுவொன்றை மாகாண மட்டத்தில் நியமிக்க வேண்டியதுடன், அந்த முன்மொழிவுகளை உரிய நியதிகளுக்கு அமைவாக மதிப்பீடு செய்யப்பட்டு மாகாண மட்டத்தில் சிறப்பான 03 முன்மொழிவுகளை **2023 நவம்பர் மாதம் 06 ஆம் திகதி அல்லது** அதற்கு முன்னதாக கிடைக்க கூடியவாறு பின்வரும் முகவரிக்கு மற்றும் (youngresearchers2023.moe@gmail.com) எனும் மின்னஞ்சலுக்கு முன்னிலைப்படுத்த வேண்டும்.

கல்விப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி))
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை
கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல

**க.வே.**

- மாகாண மட்டத்தில் தெரிவு செய்து அனுப்பப்படும் சிறப்பு மட்டத்திலான 03 முன்மொழிவுகளை முன்வைக்கும் குழுவினால் அந்த ஆராய்ச்சி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும

- ஆராய்ச்சி ஆய்வுகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு 04 மாத காலங்களை வழங்கவுள்ளதால், மேற்படி காலப்பகுதிகளுக்குரியவாறு குறிப்பிட்ட பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

பாடசாலை மற்றும் வலய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஆராய்ச்சி முன்மொழிவுகள் தொடர்பாக பாடசாலைகள் மற்றும் வலய மட்டத்தில் மதிப்பீடு செய்வது மிகவும் பொருத்தமாகும் என்பதுடன், மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்படும் 27 ஆராய்ச்சி முன்மொழிவுகள் தொடர்பாக மற்றும் தேசிய மட்டத்தில் வெற்றிபெறும் குழுக்கள் தொடர்பாக சான்றிதழ்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளையினால் திட்டமிடப்பட்டுள்ளது

- தேசிய மட்டத்திலான வெற்றிகள் தொடர்பாக கல்வி அமைச்சின் முடிவு இறுதி முடிவாகும்.

## ஆராயச்சி முன்மொழிவு–படிவம்

**1. ஆராய்ச்சியின் தலைப்பு**

" *நிலைபேறுடன் கூடிய அபிவிருத்திக்காக வலுசக்தி*" எனும் தலைப்பை அடிப்படையாக வைத்து ஆராய்ச்சி தலைப்பு தயாரிக்கப்படல் வேண்டும்

உங்களுடைய தலைப்பு சுருக்கமாக அமைய வேண்டும். தலைப்பில் தெளிவற்ற வார்த்தைகளை தவிர்க்க வேண்டியதுடன் அதிகபட்சமாக 15 வாரத்தைகளைக் கொண்டிருக்க வேண்டும். தலைப்பு மனங்கவரக்கூடிய வகையில் முன்வைக்க வேண்டும். சிக்கலின் விடயப்பரப்பை தெளிவான முறையில் காட்டப்பட வேண்டும்.

**2. அறிமுகம்**

அடையாளத்தை முன்வைக்கும்போது பரந்துபட்ட மற்றும் விரிவான தொடக்கத்துடன் முன்வைப்பது பொருத்மாகும் என்பதுடன், உங்களால் தெரிவுசெய்யப்படும் தலைப்பிற்குரியவாறு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்பாடு தெளிவாகும் விதத்தில் விவரிக்க வேண்டும். அத்துடன் தலைப்பிற்குரிய பிரயோக தேவை, தொடர்புடைய கருத்துக்கள் போலவே ஆராய்ச்சியில் எதிர்பார்க்கப்படும் முடிவுகள் தொடர்பிலும் கருத்துக்களை முன்வைக்க வேண்டும்.

**3. ஆராய்ச்சியின் குறிக்கோள்**

இதன்போது தெரிவு செய்யப்பட்ட தலைப்பிற்குரியவாறு ஆராய்ச்சியன் குறிக்கோள்களை முன்வைக்க வேண்டியதுடன், ஆராய்ச்சியின் இறுதியில் அடையக்கூடிய குறிக்கோள்கள்களை இதன்போது அடையாளம் காணப்படல் வேண்டும். குறிக்கோள்களில் ஒன்றோ அல்லது பல நிலவுவதாக இருப்பின் அவற்றை முறையாக வரிசைப்படுத்துவது பொருத்தமாகும் என்பதுடன், குறிக்கோள்களின் எண்ணிக்கை ஐந்தை கடக்காமல் இருக்க வேண்டும்.

இந்த குறிக்கோள்கள்‘SMART’ஆக இருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| S | – Specific | - குறிக்கோள்கள் சிறப்பாக இருக்க வேண்டும். |
| M | – Measurable | -.குறிக்கோள் எடைபோட முடியுமாறு அமைய வேண்டும். |
| A | – Achievable | - குறிக்கோள் அடையக் கூடியதாக அமைய வேண்டும். |
| R | – Realistic | - குறிக்கோள ் தர்க்கரீதியாக இருக்க வேண்டும் |
| T | – Time Based | - குறிக்கோள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

**4. ஆராய்ச்சி சிக்கல்கள் தொடர்பான கூற்று**

இது தெளிவான கூற்றாக இருக்க வேண்டும். ஆராய்ச்சி ஆய்வின் காலப்போக்கை காட்டவேண்டியதுடன், உங்களுடைய ஆய்வின் புதுமைகளையும் தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன் இந்த தலைப்பிற்கு அல்லது துறைக்குரியவாறு இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆயடவுகளின் மூலம் வெளிக்கொணரும் அறிவு மற்றும் உங்களுடைய ஆய்வை நோக்கி பயணிப்பதற்கிடையில் நிலவும் இடைவெளியை முழுமையாக்குவதற்காக உங்களுடைய ஆராய்ச்சி இலக்குகள் தெளிவாக அமைய வேண்டும்.

**5. ஆராய்ச்சியின் கோட்பாடுகள**

இந்த ஆய்வு / ஆராய்ச்சிகளின் போது கோட்பாடுகளை பாதுகாப்பது முக்கியமாகும். கோட்பாடுகளின் கருத்தானது, ஆராய்ச்சிகளை திட்டமிடும்போது மற்றும் செய்லபடுத்தும்போது சமூகத்திற்கு மற்றும் ஏனையவர்களின் நன்மைக்கு கராணமாகம் அடிப்படை கொள்கைகளாகும் இதன்போது பிற நபர்களால் எழுதப்பட்ட வாக்கியம் ஒன்றை அல்லது பலவற்றை பிரித்தெடுக்கும்போது பரித்தெடுக்கப்பட்ட

ஆதாரத்தை குறிப்பிட வேண்டும். ஆராய்ச்சியல் சேர்த்துக்கொள்ளும் நபர்கள் அறிவூட்டப்பட்டு ஒப்புதலை பொற்றுக்கொள்ள வேண்டியதுடன்,தனிப்பட்டத் தன்மையை பாதுகாக்க வேண்டும்.புங்குபற்றுவோரின் அடையாளம் வெளிவராதவாறு அநாமதேய அல்லது புனைபெயர்களை பயன்படுத்த வேண்டும். ஆராய்ச்சிக்குரிய அதிகாரிகளின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

**6. ஆராய்ச்சிகளை மேற்கொள்வதின் முக்கியத்துவம்**

விடயம்சார்பாக மற்றும் பிரயோக முறையில் ஆராய்ச்சியில் காணப்படும் முக்கியத்துவம் காட்டப்படல் வேண்டும். சுமகாலத்திற்கு பொருத்தமான காலத்திற்கேற்ற ஆராய்ச்சிகளை மேற்கொள்வதிழன் முக்கியத்துவத்தை தர்க்கரீதியாக காட்டப்படல் வேண்டும் ஆராய்ச்சியில் கிட்டும் றன்மைகளை காட்ட வேண்டும். (உ.ம். அறிவின் வளர்ச்சி, அறிவை முன்வைத்தல்/தவறான கருத்துக்களை சமூகத்தில் இருந்து அகற்றுதல்)

**7. ஆய்வின் எல்லை**

ஆராய்ச்சிக்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய நிதி ஒதுக்கீடுகள், காலம், மாதிரிகளை தயாரித்தல் மற்றும் ஏனைய பிரயோக மட்டுப்படுத்தல்களை சுருக்கமாக காட்டப்படல் வேண்டும்.

**8. இலக்கிய விமர்சனம்**

கருத்திட்ட முன்மொழிவு எவ்வாறு தோன்றியது என்பது இதன் கருத்தாகும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி தலைப்பிற்குரிய ஆய்வுகளின் தகவல்கள் இதில் உள்ளடக்கப்படல் வேண்டும். அதாவது சிக்கல் தொடர்பான பத்திரிகைகள், கடிதங்கள், ஊடகங்கள், அறிக்கைகள்,உரிய ஆராய்ச்சி பத்திரிகை மற்றும் ஏனைய வெளியீடுகளின் தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். ஆராய்ச்சி தலைப்பிற்குரியவாறு மேற்கொள்ளப்படும் இலக்கிய விமர்சனங்களுக்கு மேலதிகமாக உரிய துறையில் இதுவரையில் ஏற்பட்ட நீங்கள் அடையாளம் கண்ட (Research Gap) ஆராய்ச்சிகள் தொடர்பாகவும் அவற்றில் தழுவப்படாதவற்றைமு முமைப்படுத்தும் விதமும் சுருக்கமாக சமர்ப்பிக்க வேண்டும்.

**9. ஆராய்ச்சி முறைமை**

அளவுகோல்கள் மற்றும் ஆய்வுத்துறையை தெரிவு செய்தல், தரவுகளை சேகரிப்பதற்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் முறை, தரவு பகுப்பாய்வு செய்யும் முறை மற்றும் முடிவுகளை வெளிப்படுத்தும் விதம் தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்கவேண்டும்.

**10. கால சட்டகம்**

நீங்கள் நிறைவேற்றும் செயல்பாடுகளை பின்வரும் முறையில் கால சட்டகம் ஒன்றுக்காக தயாரிக்க வேண்டும்

| செயல்பாடு | 1மாதம் | | | | 2 மாதம் | | | | 3 மாதம் | | | | 4 மாதம் | | | | செலவின மதிப்பீடு (ரூ.) *(தேவை ஏற்பட்டால் மாத்திரம்)* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 கிழமை | 2 கிழமை | 3 கிழமை | 4 கிழமை | 1 கிழமை | 2 கிழமை | 3 கிழமை | 4 கிழமை | 1 கிழமை | 2 கிழமை | 3 கிழமை | 4 கிழமை | 1 கிழமை | 2 கிழமை | 3 கிழமை | 4 கிழமை | |
| **ஆராய்ச்சி முன்மொழிவினை தயாரித்தல்** | | | | | | | | | | | | | | | | | |
| சிக்கலை தெரிவு செய்தல்/ தலைப்பை தெரிவுசெய்தல் | | | | | | | | | | | | | | | | | |
| தலைப்பை (ஆசிரியரிடம்) அனுமதித்துக்கொள்தல் | | | | | | | | | | | | | | | | | |
| ஆராய்ச்சியை திட்டமிடுதல் | | | | | | | | | | | | | | | | | |
| சிக்கலுக்கானதர்க்கரீதியான/முக்கியத்துவத்தை தெரிவித்தல் | | | | | | | | | | | | | | | | | |
| ஆராய்ச்சி இலக்கிய விமர்சனம் | | | | | | | | | | | | | | | | | |
| ஆராய்ச்சி நோக்கத்தை நிர்ணயித்தல் | | | | | | | | | | | | | | | | | |
| ஆராய்ச்சி அணுகுமுறை மற்றும் ஆராய்ச்சி முறையை தீர்மானித்தல் | | | | | | | | | | | | | | | | | |
| - புள்ளிவிவரம்(population) மற்றும் மாதிரிகளை தீர்மானித்தல் | | | | | | | | | | | | | | | | | |
| மாதிரிகளில் தரவு சேகரிக்கும் முறையை தீர்மானித்தல் | | | | | | | | | | | | | | | | | |
| தரவுகளை பகுப்பாய்வு செய்யும் முறைபை தீர்மானித்தல் | | | | | | | | | | | | | | | | | |
| ஆராய்ச்சியை நடைமுறைப்படுத்தல் | | | | | | | | | | | | | | | | | |
| மேற்படி நடவடிக்கை திட்டங்களின் படி தரவுகளை சேகரித்து பகுப்பாய்வு செய்து முடிவுக்கு வருதல் ஐ | | | | | | | | | | | | | | | | | |
| பரப்புதல்களை வெளிப்படுத்தல் | | | | | | | | | | | | | | | | | |
| ஆராய்ச்சியை அறிக்கையிடுதல் | | | | | | | | | | | | | | | | | |

**11. தொடர்புடைய நூல்பட்டியல்**

இலக்கிய விமர்சனம் மற்றும் ஆராய்ச்சி அறிக்கையினை எடுதுவதற்குரிய தகவல்களைப் பெற்றுக்கொண்ட ஆதாரங்கள் காட்டப்படல் வேண்டும். (புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள், அறிக்கை, வலைத்தளம் என்பள) ஆதாரங்களை வரிசைப்படுத்தும்போது APA Style பயன்படுத்தவும்.(Microsoft Word →References →Style →APA Fifth Edition →Insert Citation →Add New Source நோக்கிச் சென்று நீங்கள் பயனபடுத்திய ஆதாரங்களின் தகவல்கள் குறிப்பிடப்பட வேண்டும்).

உதாரணம்: ஒரு புத்தகமாக இருந்தால்,

- Castle, E. B. (1970). *The teacher.* London: Oxford University Press.

சஞ்சிகை கடிதமாக இருந்தால்,

- ❖ Herrington, A. J. (1985). Classrooms as forums for reasoning and writing. *College Composition and Communication, 36*(4), 404-413.

வலைத்தளம் என்றால,

- ❖ Raymon H. Mulford Library, The University of Toledo Health Science Campus. (2008). *Instructions to authors in the health sciences.* Retrieved June 17, 2008, from http://mulford.mco.edu/instr/

APAநூலியல் பாணி தொடர்பான மேலதிக தகவல்களை பின்வரும் இணைப்பின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்

https://www.utoledo.edu/library/help/guides/docs/apastyle.pdf

**அடிப்படை ஆராய்ச்சி முன்மொழிவினை மதிப்பீடு செய்யும் படிவம்**

| |
|---|
| ஆராய்ச்சி முன்மொழிவின் தலைப்பு : |
| ஆராய்ச்சி முன்மொழிவை சமர்ப்பித்தவர் : |

| | **மதிப்பீட்டு அளவுகோல்கள்** | **சிறப்பு குறியீடு** | **உரிய புள்ளி** | **பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள்** |
|---|---|---|---|---|
| 01 | **ஆராய்ச்சியின் தலைப்பு** | .தலைப்பை அடிப்படையாகக்கொண்டு ஆராயச்சி தலைப்பு தயாரிக்கப்படல் வேண்டும். | 02 | |
| | | அதிகபட்சம் 15 வார்த்தைகளுக்குட்பட்டிருக்க வேண்டும்.. | 01 | |
| | | தலைப்பில் தெளிவற்ற வார்த்தைகள் இருத்தல் கூடாது. | 01 | |
| | | .சிக்கலின் விடயப்பரப்பு தெளிவாக காட்டப்பட வேண்டும். | 01 | |
| | | **එකතුව** | **05** | |
| 02 | **அறிமுகம்** | விரிவான மற்றும். விடயங்கள் அடங்கிய ஆரம்பத்துடன் முன்வைக்கப்பட வேண்டும. | 01 | |
| | | மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்பாட்டை தெளிவாக விளக்க வேண்டும். | 02 | |
| | | நடைமுறைத் தேவை காட்டப்பட வேண்டும்.. | 01 | |
| | | .எதிர்பார்க்கப்படும் முடிவுகள் தொடர்பான விடயங்களும் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். | 01 | |
| | | **එකතුව** | **05** | |
| 03 | **ஆராய்ச்சியின் குறிக்கோள்கள்** | தெரிவு செய்யப்பட்ட தலைப்பிற்குரியவாறு ஆராய்ச்சியன் குறிக்கோள்கள் முன்வைக்கப்பட வேண்டும். | 02 | |
| | | .ஆராய்ச்சியன் முடிவை பறைசாற்றும் குறிக்கோள்கள் அடையாளம் காட்டப்பட வேண்டும். | 08 | |
| | | குறிக்கோள்கள் ஒன்று அல்லது பல இருக்குமானால் அவற்றை முறையாக வரிசைப்படுத்த வேண்டும். | 02 | |
| | | .குறிக்கோள்களின் எண்ணிக்கை ஐந்துக்கு மேல் இல்லை என்பதனை உறுதிப்படுத்த வேண்டும். | 01 | |
| | | இந்த குறிக்கோள்கள்‘SMART’ ஆக இருக்க வேண்டும். | 02 | |
| | | **மொத்தம்** | **15** | |
| 04 | **ஆராய்ச்சி சிக்கல்கள் தொடர்பான கூற்று** | தெளிவான கூற்றாக இருக்க வேண்டும். | 01 | |
| | | ஆய்வின் காலம் சுட்டிக்காட்டப்பட வேண்டும். | 02 | |
| | | ஆய்வின் புதுமையை தெளிவுபடுத்த வேண்டும். | 02 | |
| | | .இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலமாக பெறப்பட்ட அறிவு உங்கள் கற்கையில் நுழைய வேண்டும | 05 | |
| | | நிலவும் இடைவெளியை முழுமைப்படுத்துவதற்காகஉங்கள் ஆராய்ச்சியை இலக்காகக கொண்டுள்ளது என்பது தெளிவாக இருக்க வேண்டும். | 05 | |
| | | **மொத்தம்** | **15** | |
| 05 | **ஆராய்ச்சி குறிக்கோள்கள்** | பிற ஒருவரினால் எழுதப்பட்ட வாக்கியம் ஒன்று அல்லது பலவற்றை மேற்கோள் காட்டும்போது மேற்கோள் காட்டப்பட்ட ஆதாரங்கள் குறிப்பிடப் பட வேண்டும். | 01 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | .ஆராயச்சியில் பங்கேற்பவர்களை அறிவூட்டி ஒப்புதலை பெற வேண்டும். | 01 | |
| | | தனியுரிமை பாதுகாகக்கப்பட வேண்டும். | 01 | |
| | | பங்கேற்பவர்களின் அடையாளம் வெளிப்படாத வகையில் புனைபெயர்களை பயன்படுத்த வேண்டும். | 01 | |
| | | ஆராய்சிக்கான அனுமதியை அதிகாரிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். | 01 | |
| | | **மொத்தம்** | **05** | |
| 06 | **ஆராயச்சியின் முக்கியத்துவம்** | .விடயாம்சார்ந்த ஆராய்ச்சிகளின் முக்கியத்துவம் காட்டப்படல் வேண்டும். | 01 | |
| | | ஆராய்ச்சியல் உள்ள நடைமுறை முக்கியத்துவம் காட்டப்பட வேண்டும். | 01 | |
| | | ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் உள்ள முக்கியத்துவத்தை தர்க்கரீதியாக காட்டப்பட வேண்டும். | 02 | |
| | | .ஆராய்ச்சியல் பெறப்படும் நன்மைகளை சுட்டிக்காட்ட வேண்டும். | 01 | |
| | | **மொத்தம்** | **05** | |
| 07 | **கற்றலின் வரம்பு** | .ஆராய்ச்சிக்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய நிதி ஒதுக்கீடுகள், காலம்,மாதிரி தயாரித்தல் மற்றும் பிற நடைமுறை வரம்புகளை சுருக்கமாக காட்டப்பட வேண்டும். | 05 | |
| | | **மொத்தம்** | **05** | |
| 08 | **இலக்கிய பகுப்பாய்வு** | தகுந்தவாறு காட்டப்படல் வேண்டும். | 05 | |
| | | **மொத்தம்** | **05** | |
| 09 | **පර්යේෂණ ක්‍රමවේදය** | மாதிரி | 05 | |
| | | கற்றல் துறையை தேர்ந்தெடுப்பது | 05 | |
| | | தரவுகளை சேகரித்தல் | 05 | |
| | | தரவுகளை பகுப்பாய்வு செய்யும் முறைமை | 05 | |
| | | முடிவுகளை வழங்கும் முறை | 05 | |
| | | **மொத்தம்** | **25** | |
| 10 | **கால சட்டகம்** | நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் கால சட்டகத்திற்குமைவாக தயாரிக்கப்படல் வேண்டும். | 05 | |
| | | **மொத்தம்** | **05** | |
| 11 | **தொடர்புடைய நூல் பட்டியல்** | இலக்கண பகுப்பாயவிற்கு மற்றம் ஆராய்ச்சி அறிக்கைகளை எழுதுவதற்குரிய தகவல்கள் பெறப்பட்டஆதாரங்கள் காட்டப்பட வேண்டும. புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், அறிக்கைகள் மற்றும் வலைத்தளங்கள் போன்றவை (ஆதாரங்களை வரிசைப்படுத்தும்போது APA Style பயன்படுத்தவும;. (Microsoft Word ஜ References →Style →APA Fifth Edition →Insert Citation →Add New Source டம் சென்று நீங்கள் பயன்படுத்திய ஆதாரங்களின் தகவல்களை உள்ளடக்க வேண்டும்.) | 05 | |
| | | **மொத்தம்** | **05** | |
| 12 | **ஓட்டுமெத்த முடிவு** | படிவம் பின்பற்றிருக்க வேண்டும். | 01 | |
| | | மொழி சரியாக பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இலக்கணம், எழுத்துப்பிழை,, தெளிவு | 01 | |
| | | வடிவமைத்தல் (Formatting) | 01 | |
| | | நிலைத்தன்மை (Consistency) | 01 | |
| | | போதியளவு விடயங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.. | 01 | |
| | | **மொத்தம்** | **05** | |
| | | **முழு தொத்தம்** | **100** | |

**மதிப்பாய்வு செயதவர்**

| **பெயர்** | **ஒப்பம்** |
|---|---|
| ..................................................................................... | ..................... |
| ..................................................................................... | ..................... |
| ..................................................................................... | ..................... |

திகதி :